கவிதைப்பேழை

இயல் இரண்டு

# ஏதிலிக்குருவிகள்




உயிர்களின் இருப்பை இயற்கைச்சூழலே முடிவு செய்கிறது. இயற்கைக்கும் மனிதர்க்கும் இடையே தொப்புள்கொடி உறவாக அமைவது மழைத்துளி. சூழலியல் மாற்றத்தால் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவலத்தைக் காட்சிப்படுத்தும் கவிதையை அறிவோம் வாருங்கள்!

*குருவிகளையும்*
*கூடுகளையும்*
*பார்க்கக் கூடவில்லை*

*முன்பென்றால் ஊரில்*
*அடைமழைக்காலம்*
*ஆற்றில் நீர் புரளும்*

*கரையெல்லாம் நெடுமரங்கள்*
*கரைகின்ற பறவைக் குரல்கள்*
*போகும் வழியெல்லாம்*
*தூக்கணாங்குருவிக் கூடுகள்*
*காற்றிலாடும் புல் வீடுகள்*

*மூங்கில் கிளையமர்ந்து*
*சுழித்தோடும் நீருடன்*
*பாடிக்கொண்டிருக்கும் சிட்டுகள்*

*மண்ணின் மார்பு*
*சுரந்த காலமது*
*வெட்டுண்டன மரங்கள்*
*வான் பொய்த்தது*
*மறுகியது மண்*

*ஏதிலியாய்க் குருவிகள்*
*எங்கோ போயின.*

*– அழகிய பெரியவன்*

### சொல்லும் பொருளும்

ஏதிலி – அகதி

மறுகியது – வருந்தியது

### பாடலின் பொருள்



இப்போது குருவிகளையும் குருவிக்கூடுகளையும் பார்க்க இயலவில்லை. ஊரில் ஓடும் ஆற்றில் முன்பெல்லாம் அடைமழைக் காலத்தில் நீர் புரண்டோடும். ஆற்றின் கரைகளில் உயர்ந்த மரங்கள் இருக்கும். பறவைகளின் குரல்கள் கேட்டுக் கொண்டே இருக்கும். செல்லும் வழியில் எல்லாம் தூக்கணாங்குருவிகளின் புல்லினால் ஆகிய வீடுகளாகிய கூடுகள் காற்றில் ஆடும்.

மூங்கில்களில் அமர்ந்திருக்கும் சிட்டுக்குருவிகள் ஓடும் நீரின் ஓசையோடு இணைந்து பாடும். மண்ணில் நீர் சுரந்து கொண்டிருந்த காலம் அது. இப்போது மரங்கள் வெட்டப்பட்டு விட்டன. வானம் பொய்த்து விட்டது. நிலமும் வருந்தியது. பறவைகள் எல்லாம் அகதிகளாக எங்கோ சென்று விட்டன.



6th Std-Tamil_2025_Term_I_Unit_2.indd 20 14/02/2025 15:09:35